


# 384 மின் ஸ்கூட்டர்களை டி.பி.கே.எல். பறிமுதல் செய்தது

கோலாலம்பூர், டிச. 14 -

தலைநகரைச் சுற்றியுள்ள பாதைகளில் பொதுமக்களுக்கும் வாகனங்களுக்கும் இடையூறு விளைவிக்கும் வகையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 384 மின் ஸ்கூட்டர்களை கோலாலம்பூர் மாநாகர் மன்றம் (டி.பி.கே.எல்.) பறிமுதல் செய்துள்ளது.

1974 ஆம் ஆண்டின் சாலைகள், வடிகால் மற்றும் கட்டடங்கள் சட்டத்தின் கீழ் அமலாக்கத் துறையால் மேற்கொள்ளப்பட்ட சிறப்பு நடவடிக்கையில் அந்த மின் ஸ்கூட்டர்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

மொத்தம் 384 மின் ஸ்கூட்டர்கள் இவற்றில் அடங்கும். பறிமுதல் செய்யப்பட்ட ஸ்கூட்டர்கள் அனைத்தும் செராஸ், தாமான் மிஹர்ஜாவில் உள்ள கிடங்கில் வைக்கப்பட்டுள்ளன.

பொதுமக்களின் பயன்பாட்டிற்காக மாநகரின் முக்கிய பகுதிகளில் இந்த மின் ஸ்கூட்டர்களை மாநகர் மன்றம் அறிமுகம் செய்தது. எனினும், அவ்வப்போது இதுபோன்ற நடவடிக்கையை தாங்கள் மேற்கொள்ள வேண்டியுள்ளது என கோலாலம்பூர் மாநகர் மன்றம் அதன் முகநூல் பதிவில் கூறியுள்ளது.